**பெலிஅத்த பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பெலிஅத்த பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பெலிஅத்த பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மூலதனமாக்க முடியாத வருமானச் செலவினங்களின் கூட்டுத்தொகையான ரூபா 3,922,152 தொகை காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | செலவினங்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெற வேண்டிய மற்றும் பட்டியலிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் முறையே ரூபா 3,231,216 மற்றும் ரூபா 3,095,766 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வருமானங்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | கடந்த வருடத்தில் பெலிஅத்த கொட்டியாகொடல்ல மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,669,959 தொகையான மூலதனச் செலவினம் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மூலதனச் செலவினங்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ரூபா 1,393,592 கூட்டுப் பெறுமதியுடைய 24 இருப்பு உருப்படிகள் இயந்திரம் மற்றும் உருப்படிகள் மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இருப்பு சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கடந்த வருடத்திற்குரிய ரூபா 1,195,766 தொகையான முற்பண வைப்புத் தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டமையால் சேவைக் கட்டண வருமானம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வருமானம் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 04 முகாமைத்துவ தகவல் கட்டமைப்புகளின் கூட்டுப் பெறுமதியான ரூபா 720,000 கட்புலச் சொத்தொன்றாக கணக்கு வைக்கப்படாது இயந்திர உபகரணங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சொத்துக்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (எ) | மீளச் செலுத்தப்படாத வாசிகசாலை வைப்புக்கள் ரூபா 545,150 வருமானமாக கணக்கு வைக்கப்படாது வைப்புகளாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 05 வருடங்களை விஞ்சிய வாசிகசாலை வைப்பு மீதியை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வருமானம் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஏ) | நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 470,318 கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலையான சொத்துக்களின் பெறுமதி சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஐ) | 08 இருப்பு உருப்படிகளின் கூட்டுப் பெறுமதியான ரூபா 130,338 இனால் குறைத்தும் 05 இருப்பு உருப்படிகளின் ரூபா 21,345 கூட்டுப் பெறுமதி அதிகரித்தும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இருப்பு சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஒ) | கூடுதலாக மீளளிப்புச் செய்யப்பட்டிருந்த அமைச்சர் படிகள் செலவினம் ரூபா 94,306 செலுத்த வேண்டிய மீதியொன்றாக மற்றும் ரூபா 73,120 கிரமயான கூட்டெரு இருப்பானது கையிலுள்ள இருப்பாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது | செலத்த வேண்டிய மீதிகள் மற்றும் இறுதி இருப்பு சரியான இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஓ) | ரூபா 105,000 கூட்டுப் பெறுமதியுடைய 120L அளவான குப்பைத் தொட்டிகள் 06 மற்றும் ரூபா 69,580 தொகையான 2000L அளவான 03 நீர்த்தாங்கிகள் நுகர்வுப் பொருட்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது | இருப்பு சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்களை சமர்ப்பிக்காததால் ரூபா 1,479,612 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | இந்த மீதிகளுடன் தொடர்பான கோவைகள் மற்றும் ஆவணங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும், சில மீதிகள் பல ஆண்டுகளாக முன்கொண்டுவரப்படும் மீதிகள் ஆகும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்த தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவு | சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களை கால அடிப்படையில் இனங்கண்டு வீதவரி அதிகாரப்பிரதேசத்தில் திருத்தியமைக்க முடியுமான போதிலும், அதற்கமைய செயற்படாது 1991 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களிலிருந்து மாத்திரம் மீளாய்வாண்டின் போது வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி மதிப்பீட்டு பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி ஆணையாளரின் (தென் மாகாணம்) 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தெ.மா.ச./உ.ஆ/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | சபை அலுவலகக் கட்டிடத்தின் இரண்டாவது மாடியில் அமைந்துள்ள 2860 சதுர அடியில் ஒரு பகுதி, 2013 திசெம்பர் மாதம் முதல் கணக்காய்வுத் திகதியான 2024 ஜனவரி 22 ஆம் தேதி வரை எந்தவித வாடகையும் வசூலிக்காமல் தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளது. | மதிப்பீட்டு அறிக்கையைப் பெறுவதற்கு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டது என்பது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | உள்ளூராட்சி ஆணையாளரின் (தென் மாகாணம்) 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தெ.மா.ச./உ.ஆ/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | கடை அறைகளை குத்தகைக்கு விடும்போது, குத்தகைதாரரின் கோரிக்கையின் பேரில் ஒரே நேரத்தில் அல்லது 06 மாதங்களுக்குள் தொகை வசூலிக்கப்பட வேண்டும் என்றாலும், உறவினர்கள் அல்லாத குத்தகைதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட 20 கடை அறைகளில் இருந்து ரூபா 5,140,000 வசூலிக்கப்படவில்லை. தொகையை வசூலிக்காத காலம் 02 முதல் 09 வருடங்களுக்கு இடைப்பட்டதாக காணப்பட்டது. | இந்த விடயம் தொடர்பில் உள்ளூராட்சி ஆணையாளரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,895,496 ஆக காணப்பட்டதுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,077,515 ஆக காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீட்டு வருமானம்** | **பட்டியலிடப் பட்ட வருமானம்** | **சேகரிக்க ப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பீட்டு வருமானம்** | **பட்டியலிடப் பட்ட வருமானம்** | **சேகரிக்க ப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஏனைய வரி | 5,200,700 | 5,086,094 | 5,008,395 | 2,718,814 | 4,027,000 | 4,288,942 | 3,402,190 | 2,641,115 |
| வாடகை | 13,115,800 | 9,770,509 | 8,397,745 | 3,392,491 | 7,139,280 | 5,679,724 | 5,652,114 | 2,019,727 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,911,200 | 2,104,745 | 1,805,115 | 302,750 | 1,736,000 | 1,378,663 | 1,382,814 | 3,120 |
| ஏனைய வரு மானங்கள் | 10,648,200 | 16,525,935 | 21,185,022 | 804,902 | 9,907,450 | 13,090,184 | 10,466,391 | 5,463,989 |
| **மொத்தம்** | **30,875,900** | **33,487,283** | **36,396,277** | **7,218,957** | **22,809,730** | **24,437,513** | **20,903,509** | **10,127,951** |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 1294 வீதவரி அலகுகளிலிருந்து பெற வேண்டிய வரி ரூபா 2,477,094 மற்றும் சபைக்கு சொந்தமான 24 கடை அறைகளிலிருந்து பெற வேண்டிய வாடகை ரூபா 1,483,410 அறவிடுவதற்கு பிரதேச சபை அதிகாரச்சட்டத்தில் முறையே 158(1) மற்றும் 159(1) ஆம் பிரிவின் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 193,311 தொகையான வீதவரி மற்றும் ரூபா 813,557 கடை வாடகை அறவிடப்பட்டதுடன், எஞ்சிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | 151 வியாபார அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வியாபார மற்றும் கைத்தொழில் வரி ரூபா 208,770 தொகை 2022 திசெம்பர் 09 ஆந் திகதிய 2310 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2023 மார்ச் 31 ஆந் திகதியளவில் அறவிடப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 106,560 அறவிடப்பட்டுள்ளதாகவும், ரூபா 21,250 தொகையை பதிவழிப்பதற்கு ஆளுநருக்கு அனுப்பப்பட்டதாகவும், எஞ்சிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும். | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |
| (இ) | பெலிஅத்த புதிய வணிகத் தொகுதியின் இரண்டாவது மற்றும் மூன்றாவது தளம் 2016 சனவரி 07 ஆந் திகதி முதல் 30 வருட காலத்திற்காக குத்தகையாளர் ஒருவருக்கு குத்தகைக்கு | மதிப்பீட்டிற்கான அளவீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படும் மேலும் | சுற்றறிக்கையின் விதிகள் மற்றும் குத்தகை ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தது. தென் மாகாண ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தெ.மா.ச./உ.ஆ/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் குத்தகை உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 2.02 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட குத்தகைப் பணம் புதிய குத்தகையாளர் ஒருவரின் ஊடாக 05 வருடங்களுக்கு ஒரு தடைவ திருத்தப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்காது 2015 யூலை 13 ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ள ரூபா 100,000 தொகையான வாடகைப் பணம் தற்போது அறவிடப்பட்டவாறு உள்ளது. மேலும், உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்த வாடகைத் தொகை உரிய மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய வாடகைப் பணத்தை செலுத்த குத்தகையாளர் நடவடிக்கை எடுக்காமையால் நிலுவைத் தொகை ரூபா 832,500 ஆகும். | வாடகை நிலுவைகள் தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சபைக்கு சொந்தமான மீன்பிடிக் கட்டிடத்தில் அமைந்துள்ள மீன் கடைக்காக ரூபா 9,000 ஆன மாதாந்த வாடகை அறவிடப்பட வேண்டும் என மதிப்பீட்டு அறிக்கையொற்கு வழங்கப்பட்டுள்ள போது அதற்கமைய நடவடிக்கை எடுக்காது ரூபா 5,000 தொகையான மாதாந்த வாடகை அறிவிடுவதற்கு சபை தீர்மானித்தமையால் 2020 சனவரி 29 ஆந் திகதி முதல் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலுமான காலப்பகுதிக்குரிய ரூபா 110,000 தொகையான வாடகைப் பணம் சபைக்கு இழப்பாகியிருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சபை நிதியத்திற்கு நேர்ந்த நட்டத்தை உரிய தரப்பினரிடம் துரிதமாக அறவிட வேண்டும். |
| (உ) | பெற வேண்டிய இயந்திர உபகரண வாடகை மற்றும் வர்த்தர உரித்தினை குத்தகைக்கு வழங்கியமையால் கிடைக்கும் வருமானம் ஆகியவை முறையே ரூபா 1,273,483 மற்றும் ரூபா 115,959 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இயந்திர உபகரண வாடகை ரூபா 128,900 அறவிடப்பட்டது என்பது. | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |
| (ஊ) | 2023 ஆம் ஆண்டின் வியாபார ஆராய்ச்சி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 09 நிரந்தர அறிவித்தல் பலகைகளுக்கான ரூபா 139,200 தொதகை குறைவாக பட்டியலிடப்பட்டிருந்தது. | விளம்பர பலகைகளுக்காக குறைவாக அறவிடப்பட்ட பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வருடாந்த மதிப்பாய்வு சரியாக மேற்கொள்ளப்பட்டு உரிய கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | மாகாண சபையின் பிரதம செயலாளரின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 31,401,829 ஆகும். | ரூபா 8,680,257 அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய நிலுவைப் பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவைப் பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தரைத்தளம் மற்றும் முதலாந் தளத்துடனான 270.4 சதுர மீட்டர் பரப்பளவில் வணிகக் கட்டிடத்தைக் கட்டுவதற்கான BA/BPS/20/100(U) இலக்கமுடைய கட்டிடத் திட்டம் 2020 நவம்பர் 27 ஆந் திகதி ஒப்புதல் அளிக்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தில் குறிப்பிடப்படாத இரண்டாவது தளமும் கட்டப்பட்டிருந்ததுடன் இரண்டாவது மாடிக்கு ரூபா 270,400 காப்பீட்டு அனுமதி வழங்குவதற்கான கட்டணம் வசூலிக்கப்படவில்லை. மேலும், ரூபா 5,000 கட்டணம் செலுத்தாமல், இணக்கச் சான்றிதழ் பெறாமல், வணிக நடவடிக்கைகள் நடத்தக் கூடாது என்றாலும், தரைத்தளத்திற்குள் உள்ள கடைகளில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. | விதிமீறலான கட்டுமானங்கள் அகற்றப்பட்டு, இணக்கச் சான்றிதழ் பெறாமல் தொழில் தொடங்குவதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மேவுகை அங்கீகாரம் வழங்கும் கட்டணம் மற்றும் இணக்கச் சான்றிதழ் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | DS/BPS/22/103(U) ஆம் இலக்கமுடைய விண்ணப்ப படிவத்தின் மூலம் 12 ஏக்கர்கள் 26.68 பேர்ச் பரப்பளவான காணியொன்று பிரிப்பதற்கு 2023 பெப்ரவரி 02 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இந்த காணியிலிருந்து சபைக்கு பெற வேண்டிய 03 ரூட் 31 பேர்ச் பரப்பளவான காணி இரு இடங்களிலிருந்து பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்ததுடன், அது குறைந்த வணிகப் பெறுமதியுடைய குழிகள் மற்றும் நீர் தேங்கியுள்ள இடங்களை கொண்டிருந்தமையால் கருத்திற்கொள்ளக்கூடிய அளவான செலவினம் மேற்கொள்ளப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டு பயன்படுத்தக்கூடிய இரு காணிகள் | ஏலதாரர் அத்துமீறி வெட்டியுள்ள குழி அந்த காணியின் எல்லைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், காணியின் சட்டரீதியான உரித்தினை சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | ஆக்கபூர்வமாக பயன்படுத்தக்கூடிய காணித் துண்டொன்றை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என்பது அவதானிக்கப்பட்டமையால் சபையின் முகாமைத்துவ சபைக்கு பெற வேண்டிய காணித் துண்டு பரிசோதிக்கப்படாது பெற்றுக்கொள்ளப்படல் மற்றும் பொருத்தமான காணித்துண்டொன்றை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | மீளாய்வாண்டின் போது சபையினால் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்த 07 கைத்தொழில்கள் சுற்றுச்சூழல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளாமை மற்றும் 2019, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் சுற்றுச்சூழல் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலத்தை விஞ்சிய 30 கைத்தொழில் அலகுகளிலின் அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்படாமையின் அடிப்படையில் சபைக்கு பெற வேண்டிய ரூபா 183,150 தொகையான சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திர கட்டண வருமானத்தை அறவிடுதல் தொடர்பில் சபையின் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 19 தொழில் நிறுவனங்களுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு, உரிமம் வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மற்ற தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழல் உரிமம் பெறுவதற்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | தொழில் நிறுவனங்கள் சுற்றுச்சூழல் அனுமதி பெற ஊக்குவிக்க வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 84 முதல் 108 மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் சேவையில் ஈடுபடாத 02 வாகனங்கள் பழுதுபார்க்கப்படாமல் அல்லது கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காது வாகனங்கள் திறந்தவெளியில் தரித்து வைக்கப்பட்டுள்ளமையால் இற்றுப்போனவாறு காணப்பட்டது. | இரு கெப் வண்டிகள் கைத்தவிர்ப்பதற்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன், அந்த பணிகளை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வாகனங்கள் பழுதுபார்க்கப்படாமல் அல்லது கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி வரை, 28 காணிகள் மற்றும் கட்டிடங்களின் சட்ட உரித்தினை சபைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 09 காணிகளின் உரிமை கையகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், எஞ்சிய காணிகளை சுவீகரிக்க தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும். | சொத்துக்களை சட்டப்பூர்வமாக உரிமையாக்குவதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.3 செயற்திட்டங்கள், பணிப்பொறுப்புகள் அல்லது மூலதனப் பணிகளிலான தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட ரூபா 6,500,000 மதிப்புடைய 10 அபிவிருத்தி முன்மொழிவுகள் மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. | 05 அபிவிருத்தி முன்மொழிவுகள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன | வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 இன் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரிவு 5.6.1 (அ) இன் படி, கொள்வனவு செய்யப்படவுள்ள நோக்கங்களை அடைவதற்கு தேவையான பொருட்கள் அல்லது வேலைகளுக்கான விவரக்குறிப்புகள் குறுகியதாக இருக்கக்கூடாத போதிலும், ரூபா 580,000 கூட்டுப் பெறுமதியுடைய டயர்கள் மற்றும் டியூப்களை வாங்குவது தொடர்பாக அவ்வாறு செய்யப்படவில்லை. | கொள்முதல் விஷயத்தில் பல குறைபாடுகள் கண்டறியப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளன | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.11 ஆம் பிரிவின் பிரகாரம் தெரு விளக்கு பெட்டிகளை வாங்கும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் பெறப்பட வேண்டும், அவ்வாறு செயற்படாது ரூபா 355,000 மதிப்புள்ள 20 கோப்ரா தெரு விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பெறுகைகள் குழுவில் தொழில்நுட்ப அலுவலர்கள் உறுப்பினர்களாக உள்ளனர் என்றும், இந்த கொள்முதல் செய்வதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு அவர்கள் பங்களித்துள்ளனர் எனபதும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக மாணவர் திறன் திட்டத்திற்கு பரிசு வழங்குவதற்காக 902 எண்ணிக்கையான 120 பக்க CR புத்தகங்கள் மற்றும் 82 எண்ணிக்கையான 80 பக்க CR புத்தகங்கள் மொத்தம் ரூபா 98,810 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்துமூல அறிவுரைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொட்டிகொடெல்ல D.A.ராஜபக்ஷ விளையாட்டரங்கின் அபிவிருத்திக் கைத்தொழிலுக்கான விலை அதிகரிப்பாக ரூபா 161,439 செலுத்தப்பட்டிருந்த போதிலும், விலை அதிகரிப்பாக செலுத்தக்கூடிய தொகை ரூபா 79,574 ஆகவும், மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 81,865 ஆகவும் இருந்தது. | பிடிகாசிலிருந்து அறவிடப்படும் என்பது. | மிகைக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மொத்தம் ரூபா 3,997,652 மதிப்பிலான 04 வீதி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான நிர்மாணப் பணிகள் நிறைவடைந்திருந்த போதிலும், அந்தத் திட்டங்களில் வீதியில் | அந்த அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகிறது | நிர்ணயிக்கப்பட்ட தரத்தின்படி கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் |

| | | |
|---|---|---|
| கற்கள் இடப்பட்டிராமை, கொங்கிறீட் கரைகளுக்கு இணையான வீதியில் கற்கள் பதிக்கப்படாமை, சில இடங்களில் கான்கிரீட் கட்டைகளை விட உயரமாக சாலையில் கற்கள் போடப்பட்டிருப்பதும், கான்கிரீட் சுவர்கள் மற்றும் கல் பதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இடையே உள்ள இடைவெளிகள் நிரப்பப்படாமல் இருப்பதும் போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | பணம் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) 2023 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட தொழில்களுக்கு அச்சுக் கற்களை பெறக்கூடிய இடங்களை கண்டறிந்து அந்த இடத்துக்கும் தொழில் நடக்கும் இடத்துக்கும் இடையே உள்ள தூரத்தைக் கருத்தில் கொண்டு போக்குவரத்துச் செலவுகளைக் கணக்கிட்டுச் செலுத்த வேண்டும் என்றாலும், அதற்கமைய செயற்படாது பணிகள் நிறைவு செய்யப்பட்ட 06 தொழில்களுக்கு 20 கிலோ மீட்டர் தூரத்தில் அச்சுக் கற்கள் கொண்டு செல்லப்படுவதாக குறிப்பிட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ரூபா 298,073 செலுத்தப்பட்டாலும், கான்கிரீட் அச்சுக்கற்களை கொள்வனவு செய்த இடம் மற்றும் தூரம் பற்றிய விவரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அச்சுக் கற்கள் வாங்கப்பட்ட இடங்கள் மற்றும் தொலைவுகள் சம்பந்தப்பட்ட ஒப்பந்த சங்கங்களிடம் விசாரிக்கப்பட்டு, அவை கிடைத்த பிறகு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படும் என்பது. | எடுத்துச் செல்லப்படும் அச்சுக் கற்களின் சரியான தூரத்தைக் கண்டறிந்த பிறகு பணம் செலுத்த வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான பதவியணி முறையே 91 மற்றும் 103 ஆக இருந்ததால், 05 பதவிகள் தொடர்பான 25 மிகைகளை முறைமைப்படுத்த மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணியாளர் மிகைகள் தொடர்பாக பெறப்பட்ட அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படும் | பணியாளர்களின் மிகைகளை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |